# ஆக்ட் பைபர் நெட் புதிய திட்டம்

இன்டர்நெட் நிறுவனமான அட்ரியா கன்வெர் ஜென்ஸ் டெக்னாலஜிஸ் (ஆக்ட்) அதன் உச்சபட்ச வேகம் கொண்ட 100MBPS திட்டத்தினை சென்னையில் அறிமுகம் செய்துள்ளது. இப்புதிய வழங்குபட்டியல், ரீடெய்ல் பிரிவில் 40 Mbps முதல் 100 Mbps வரையிலான வேகங்களை கெண்ட திட்டங்களையும் மற்றும் சிறு அலுவலகம் வீட்டு அலுவலகம் பிரிவின் 100 Mbps  முதல் 125 Mbps வரையிலான வேகம் கொண்ட திட்டங்களையும் கொண்டுள்ளது. இந்நிறுவனம் சென்னையில் 75Mbps வேகம் கொண்ட புதிய திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளது. 6 மற்றும் 12 மாதங் கள் அட்வான்ஸ் ரெண்டல் திட்டத்திலுள்ள அதன் வாடிக்கையாளர்களுக்கு கூடுதலாக25 ஜிபி எக்ஸ்ட்ரா இந்நிறுவனம், வழங்கும் என்று ஆக்ட் குழு மத்தின், தலைமை செயல் அலுவலர் பாலா மல்லாடி தெரிவித்தார்.